ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 3.10 – திருமடந்தை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 3.10 – திருமடந்தை

‡ திரு மடந்தை மண் மடந்தை இருபாலும் திகழத் ⋆
தீ வினைகள் போய் அகல அடியவர்கட்கென்றும் அருள் நடந்து ⋆
இவ்வேழ் உலகத்தவர் பணிய ⋆
வானோர் அமர்ந்தேத்த இருந்த இடம் ⋆ பெரும் புகழ் வேதியர்
வாழ் தரும் இடங்கள் மலர்கள் மிகு கைதைகள் செங்கழுநீர் ⋆
தாமரைகள் தடங்கள் தொறும் இடங்கள் தொறும் திகழ ⋆
அரு இடங்கள் பொழில் தழுவி எழில் திகழு நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே ‖ **3.10.1** ‖

வென்றி மிகு நரகன் உரம் அது அழிய விசிறும் ⋆
விறல் ஆழித் தடக் கையன் விண்ணவர்கட்கு ⋆
அன்று குன்று கொடு குரை கடலைக் கடைந்தமுதம் அளிக்கும் ⋆
குரு மணி என்னார் அமுதம் குலவி உறை கோயில் ⋆
என்றும் மிகு பெருஞ்செல்வத்தெழில் விளங்கு மறையோர் ⋆
ஏழ் இசையும் கேள்விகளும் இயன்ற பெருங்குணத்தோர் ⋆
அன்றுலகம் படைத்தவனே அனையவர்கள் நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே ‖ **3.10.2** ‖

உம்பரும் இவ்வேழ் உலகும் ஏழ் கடலும் எல்லாம் ⋆
உண்ட பிரான் அண்டர்கள் முன் கண்டு மகிழ்வெய்த ⋆
கும்ப மிகு மத யானை மருப்பொசித்துக் ⋆
கஞ்சன் குஞ்சி பிடித்தடித்த பிரான் கோயில் ⋆ மருங்கெங்கும்
பைம்பொனொடு வெண் முத்தம் பல புன்னை காட்டப் ⋆

பலங்கனிகள் தேன் காட்டப் பட அரவேர் அல்குல் ⋆
அம்பனைய கண் மடவார் மகிழ்வெய்து நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே ॥ **3.10.3** ॥

ஓடாதவாள் அரியின் உருவம் அது கொண்டு ⋆
அன்றுலப்பில் மிகு பெரு வரத்த இரணியனைப் பற்றி ⋆
வாடாத வள் உகிரால் பிளந்தவன் தன் மகனுக்கு ⋆
அருள் செய்தான் வாழும் இடம் மல்லிகை செங்கழுநீர் ⋆
சேடேறு மலர் செருந்தி செழுங்கமுகம் பாளை ⋆
செண்பகங்கள் மணம் நாறும் வண் பொழிலின் ஊடே ⋆
ஆடேறு வயல் ஆலைப் புகை கமழும் நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே ॥ **3.10.4** ॥

கண்டவர் தம் மனம் மகிழ மாவலி தன் வேள்விக் ⋆
களவின் மிகு சிறு குறளாய் மூவடி என்றிரந்திட்டு ⋆
அண்டமும் இவ்வலை கடலும் அவனிகளும் எல்லாம் ⋆
அளந்த பிரான் அமரும் இடம் வளம் கொள் பொழில் அயலே ⋆
அண்டம் உறு முழவொலியும் வண்டினங்கள் ஒலியும் ⋆
அரு மறையின் ஒலியும் மடவார் சிலம்பின் ஒலியும் ⋆
அண்டம் உறும் அலை கடலின் ஒலி திகழும் நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே ॥ **3.10.5** ॥

வாள் நெடுங்கண் மலர்க் கூந்தல் மைதிலிக்கா ⋆
இலங்கை மன்னன் முடி ஒருபதும் தோள் இருபதும் போய் உதிர ⋆
தாள் நெடுந்திண் சிலை வளைத்த தயரதன் சேய் ⋆
என்றன் தனிச் சரண் வானவர்க்கரசு கருதும் இடம் தடமார் ⋆
சேண் இடம் கொள் மலர்க் கமலம் சேல் கயல்கள் வாளை ⋆
சென்னெலொடும் அடுத்தரிய உதிர்ந்த செழு முத்தம் ⋆

வாள் நெடுங்கண் கடைசியர்கள் வாரும் அணி நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே ‖ **3.10.6** ‖

தீ மனத்தான் கஞ்சனது வஞ்சனையில் திரியும் ⋆
தேனுகனும் பூதனை தன் ஆர் உயிரும் செகுத்தான் ⋆
காமனைத் தான் பயந்த கரு மேனி உடை அம்மான் ⋆
கருதும் இடம் பொருது புனல் துறை துறை முத்துந்தி ⋆
நா மனத்தால் மந்திரங்கள் நால் வேதம் ⋆
ஐந்து வேள்வியோடாறங்கம் நவின்று கலை பயின்று ⋆
அங்காமனத்து மறையவர்கள் பயிலும் அணி நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே ‖ **3.10.7** ‖

கன்றதனால் விளவெறிந்து கனி உதிர்த்த காளை ⋆
காமரு சீர் முகில் வண்ணன் காலிகள் முன் காப்பான் ⋆
குன்றதனால் மழை தடுத்துக் குடம் ஆடு கூத்தன் ⋆
குலவும் இடம் கொடி மதிள்கள் மாளிகை கோபுரங்கள் ⋆
துன்று மணி மண்டபங்கள் சாலைகள் ⋆ தூ மறையோர்
தொக்கீண்டித் தொழுதியொடு மிகப் பயிலும் சோலை ⋆
அன்றலர்வாய் மதுவுண்டங்களி முரலும் நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே ‖ **3.10.8** ‖

வஞ்சனையால் வந்தவள் தன் உயிர் உண்டு வாய்த்த ⋆
தயிர் உண்டு வெண்ணெய் அமுதுண்டு ⋆
வலி மிக்க கஞ்சன் உயிர் அதுவுண்டிவ்வுலகுண்ட காளை ⋆
கருதும் இடம் காவிரி சந்தகில் கனகம் உந்தி ⋆
மஞ்சுலவு பொழில் ஊடும் வயல் ஊடும் வந்து ⋆
வளம் கொடுப்ப மா மறையோர் மா மலர்கள் தூவி ⋆

அஞ்சலித்தங்கரி சரண் என்றிறைஞ்சும் அணி நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே ‖ **3.10.9** ‖

‡ சென்று சின விடை ஏழும் படவடர்த்துப் ⋆
பின்னை செவ்வித் தோள் புணர்ந்துகந்த திருமால் தன் கோயில் ⋆
அன்றயனும் அரன் சேயும் அனையவர்கள் நாங்கூர் ⋆
அரிமேய விண்ணகரம் அமர்ந்த செழுங்குன்றை ⋆
கன்றி நெடு வேல் வலவன் மங்கையர் தம் கோமான் ⋆
கலிகன்றி ஒலி மாலை ஐந்தினொடு மூன்றும் ⋆
ஒன்றினொடும் ஒன்றும் இவை கற்று வல்லார் ⋆
உலகத்துத்தமர்கட்குத்தமர் ஆய் உம்பரும் ஆவர்களே ‖ **3.10.10** ‖

அடிவரவு — திருமடந்தை வென்றி உம்பர் ஓடாத கண்டவர் வாள் தீமனத்தான் கன்று வஞ்சனையால் சென்று போது

திருமடந்தை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்